பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 06 2025 FRIDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடு முழுவதும் காஷ்மீர் தொடங்கி கன்னியாகுமரி வரை ரயில்வே இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- சாதிவாரி கணக்கெடுப்புடன் கூடிய மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தவறான தகவலை தெரிவிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
- முதுநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வினை ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி நடத்த உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- அஇஅதிமுக – பிஜேபி கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இடம்பெறும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.
- மாஸ்கோ Wushu சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

நாடு முழுவதும் காஷ்மீர் தொடங்கி, கன்னியாகுமரி வரை ரயில்வே இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று ஜம்மு காஷ்மீரின் Katra-வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செனாப் பாலத்தை திறந்துவைத்ததோடு பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கிவைக்கும் நிகழ்ச்சி, நம் நாட்டின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் எடுத்துரைப்பதாக அவர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா வளர்ச்சி கண்டு வருவதை பொறுத்துக்கொள்ள முடியாமல் பாகிஸ்தான் ஆதரவிலான தீவிரவாதிகள் பஹல்காமில் தாக்குதல் நடத்தியதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<<>>>>>

வக்ஃப் சொத்துக்களை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இணையதள சேவை தொடங்கப்பட்டுள்ளதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இதன்மூலம், வக்ஃப் சொத்துக்களை முறைகேடாக யாரும் பயன்படுத்த இயலாது என்று அவர் தெரிவித்தார்.

ஏழை இஸ்லாமியர்கள் மற்றும் மகளிர் இதன்மூலம் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார்.

நாட்டில், ஒன்பது லட்சத்திற்கும் கூடுதலான வக்ஃப் சொத்துக்கள் உள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சாதிவாரி கணக்கெடுப்புடன் கூடிய மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தவறான தகவலை தெரிவிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இந்த குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பை 2027-ஆம் ஆண்டிற்கு தள்ளிவைத்து தமிழகத்தின் பிரதிநிதித்துவத்தை குறைக்க பிஜேபி முயற்சிப்பதாக திரு மு.க.ஸ்டாலின் கூறியிருப்பது உண்மைக்கு மாறானது என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசை குறை கூறினால், தனது ஆட்சியில் நடக்கும் ஊழல்களை மக்கள் மறந்துவிடுவார்கள் என்ற திரு மு.க.ஸ்டாலினின் எண்ணம் நிறைவேறாது என்றும் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார். முன்னதாக, மக்கள் தொகை கணக்கெடுப்பில் நிகழும் தாமதமும், அதனைத் தொடர்ந்து நடக்க இருக்கும் தொகுதி மறுவரையறையும் தற்செயலானது அல்ல என்று திரு மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்.

2027-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டால், தென் மாநிலங்களின் ஜனநாயக வலிமையை குறைத்துவிடும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அதில் குறிப்பிட்டிருந்தார்.

<<<<<<>>>>>

முதுநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வினை ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி நடத்த உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக, தேர்வுகளுக்கான தேசிய வாரியம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், திரு பிரசாந்த் குமார் மிஸ்ரா, திரு Augustine George Masih அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

தேர்வினை ஒரே ஷிப்டில் நடத்தவும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>

பிஜேபி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நாளை மதுரை வரவுள்ளதாக அக்கட்சியின் மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று மதுரை அருகே கூட்டம் நடைபெறவுள்ள இடத்தை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நாளை இரவு மதுரை வரும் திரு அமித் ஷா, நாளை மறுநாள் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக – பிஜேபி கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இடம்பெறும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>

இனி . . .

மோடி அரசின் 11 ஆண்டுகால சாதனைகள் குறித்து ஆகாஷ்வாணி வழங்கும் செய்தித்தொகுப்பு

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதில் இன்று இடம்பெறுகிறது நாட்டின் கலாச்சார பாதுகாப்பு மற்றும் நாகரீக பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கும் நடவடிக்கைகள்.

<<<<<<>>>>>

திருவண்ணாமலை மலையில் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள ஆயிரத்து 535 கட்டிடங்களை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு அம்மாவட்ட ஆட்சியருக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு ஸ்ரீராம், நீதிபதி திரு சுந்தர்மோகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

முன்னதாக, சட்டவிரோத கட்டுமானங்களை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட குழு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணை வரும் 20-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பையில் 26 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வண்டலூர் - வாலாஜாபாத் சாலை மேம்பாலத்தை மாநில அமைச்சர்கள் திரு எ வ வேலு மற்றும் திரு தா மோ அன்பரசன் இன்று திறந்துவைத்தனர்.

------------

வேலூர் மாவட்டத்தில் மாணவர்கள் உயர்கல்வி பயில்வதற்கு பெற்றோர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------------

கரூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களில் சேர்க்கைப்பணி தற்போது நடைபெற்று வருவதாக ஆட்சியர் திரு தங்கவேல் கூறியுள்ளார்.

----------------

திருவண்ணாமலையில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளியில் போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திரு தர்பகராஜ் தலைமையில் நடைபெற்றது.

-------------------

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள ஸ்ரீ சக்தி காளியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மாஸ்கோ Wushu சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 56 கிலோ எடைப்பிரிவில் Aryan –னும், மகளிர் ஜுனியர் பிரிவில் Linthoingambi Laitonjam –னும் ங்கப்பதக்கம் வென்றனர்.

-------------

இந்தியா ஏ - இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி Northampton-ல் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து லயன்ஸ் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து, பேட் செய்து வரும் இந்தியா ஏ அணி, முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 84 ரன் எடுத்துள்ளது.

------------

கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்தியாவின் Piyush Chawla அறிவித்துள்ளார்.

-----------

துருக்கியில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் Rishabh Yadav காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>